# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 15 (28-04-1998) செவ்வாய்க்கிழமை UTHAYAN- Alvely National Tamil Daily கதிர்:129


# ஆயுதக் கலாசாரத்தை கைவிட்டு சமாதானப் பாதைக்கு வாருங்கள்!

## யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் மெண்டிஸ் அழைப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

''ஆயுதக் கலாசாரத்தைக் கைவிட்டு சமாதானப் பாதைக்கு வாருங்கள்.''

—இவ்வாறு அழைப்புவிடுத்தார் யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ்.

நேற்று மாலை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் தமது உரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நேரடியாகக் குறிப்பிடா விட்டாலும், அந்த அமைப்புக்கே அவர் அழைப்பு விடுத்தார் என்பதை உரையில் உணரமுடிந்தது.

கொழும்பு சித்தாரா இசைக்குழுவின் ''தெய்வீக இராகங்கள்'' இசைநிகழ்ச்சி நேற்று பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் பிரிகேடியர் மெண்டிஸ் மேலும் கூறியதாவது:

இன்று ஆயிரக்கணக்கில் இங்கு திரண்டிருக்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து மகிழ்கின்றோம். உங்கள் வரவும் உங்கள் முகத்தில் காணப்படுகின்ற மலர்வும் ஒரு செய்தியை எமக்குத் தெளிவுப்படுத்துகின்றன.

யுத்தத்தையோ ஆயுத கலாசாரத்தையே நீங்கள் விரும்பவில்லை என்பதை நாம் ஏற்பாடுசெய்த இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## "புலி வேட்டை" மூதூரில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 28

திருகோணமலை மூதூர்ப் பிரதேசத்தில் ''புலி வேட்டை'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணிக்கு கடற்படையுடன் இணைந்து இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதை அடுத்தே இரு முனைகளில் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விருவித்து தீர்ப்பு

கொழும்பு, ஏப். 28

அவசரகால சட்டவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட தபால்துறைத் தொழிற்சங்கப் பிரமுகர்கள் 12 பேரும் பொலீஸ் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் நேற்று மாளிகாகந்தை நீதிவான் ஏ. எல். எம். சகித்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு பொலீஸாரால் விடுதலை செய்யப்பட்ட மேற்படி 12 பேரும் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டது. அங்கு விடுதலை உத்தரவு அறிவிக்கப்பட்டது.

(உ-21)

## வெருகல் பாதை குண்டினால் தகர்ப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் திருகோணமலை மாவட்டத்துக்கும் இடையில் கதிரவெளி— வெருகல்சேவையில் ஈடுபட்டிருந்த மிதக்கும் பாதை நேற்று அதிகாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

ஈச்சிலம்பத்தை பிரதேசத்தில் படையினர் ஆரம்பித்துள்ள ''புலி வேட்டை'' இராணுவ நடவடிக்கையின் எதிரொலியாகவே இப்பாதை தகர்க்கப் பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

இச்சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்பது தெரியவில்லை. ஆனால் அதிகாலை பாரிய குண்டு வெடிப்புச் சத்தமொன்று எதிரொலித்தது என மக்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு— திருகோணமலை மாவட்டத்துக்கு இடையிலுள்ள மகாவலி கிளை ஆறு ஒன்றுக்கு நடுவே இப்பாதை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது.

(உ-21)

## ஊர்காவலர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஏப். 28

திருகோணமலை கோமரங்கடவலயில் நேற்று முன்தினம் மாலை ஊர்காவலர் ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

[உ-21]

## ஆயிரம் பயணிகள் இங்கிருந்து திருமலைக்கு

### வியாழனன்று பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 28

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை கப்பல் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இக்கப்பல் சேவை மூலம் ஆயிரம் பயணிகளை இங்கிருந்து ஏற்றிச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கப்பலில் செல்லப் பெயர் பதிவு செய்த பயணிகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தமக்குரிய மதிய உணவுடன் யாழ்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொருவருக்கு 'எய்ட்ஸ்' அறிகுறி!

யாழ்ப்பாணம், ஏப். 28

'எய்ட்ஸ் நோய்த் தாக்கத்திற்குள்ளாகியிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் பூர்வாங்கப் பரிசோதனைகள் மூலம் இனங்காணப்பட்டுள்ளார்.

ஏற்கனவே 'எய்ட்ஸ்' அறிகுறிகள் இருப்பதாக யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த சில தினங்களுக்கு முன் இனங்காணப்பட்டவரின் மனைவியே தற்போது இனங்காணப்பட்டவராவார்.

5 மாதகாலத்துக்கும் மேலாக நீடித்த மாறாத இருமல், சளி என்பன காரணமாகக் கடந்த 12 ஆம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் தீவிர எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 28

''எய்ட்ஸ்'' நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளுடன் நோயாளி ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் இனங்காணப்பட்டிருப்பதை அடுத்து இந்நோய்ப் பரவல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு நோயாளிக்கு ஊசி ஏற்றப் பயன்படுத்திய ''சிறிஞ்''சை ஏனையோருக்கும் பயன்படுத்தப்படுவது

(10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்பு: ஜாவின் கருத்துக்கு இலங்கை ஆட்சேபம்

கொழும்பு, ஏப். 28

இலங்கையின் வடக்கு— கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சியின் வெளிவிவகார ஆலோசகர் நாகேந்திரநாத்ஜா தெரிவித்த கருத்துக்கு இலங்கை அரசு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் சிவசங்கர் மேனன் வெளிவிவகார

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தமிழர்களிடம் உதவி கோரி பிரபா கடிதம்

வவுனியா, ஏப். 28

தமது போராட்டத்துக்கு உதவுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள்இயக்க தலைவர் வே. பிரபாகரன் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஆற்றியுள்ள விசேட உரையின் பிரதிகள் உலகெங்கும் உள்ள வெளிநாட்டு தமிழ் அமைப்புக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தனது முழுப் படைப்பலத்தையும்திரட்டிநீண்ட மூர்க்கமான போரை நடத்தி வருகின்றபோதும்புலிகள் இலட்சியப்பற்றுடன் அதனை எதிர்கொண்டு வரும் விதம் குறித்தும் அதில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் தமது உரையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு உதவியுடன் தனது சகல வளங்களையும் ஒன்று திரட்டிஅரசு நடத்தி வரும் போரை எந்த ஒரு நாட்டின் உதவியும் இன்றி வரையறுக்கப்பட்ட வளத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## சுகுணா தனபாலசிங்கம்

27-04-98 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 9ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட மரண அறிவித்தலின் பிரகாரம் 28-04-98 ஆம் திகதி நடைபெறவிருந்த இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் 29-04-98 புதன்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் நடைபெறும் என்பதை அனைவர்க்கும் அறியத்தரு கின்றோம்.

தகவல்;
கே. அழகரத்தினம்
(மைத்துனர்)
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(சி/3581)

## திருமதி ராணி ஆசீர்வாதம்

467/B 7 கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமான திருமதி றெஜீனாராணி ஆசீர்வாதம் 26-04-1998 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்வம் ஆசீர்வாதத்தின் (TOM) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை திருமதி சிசீலியா சூசைப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ் சென்ற திரு. திருமதி சாமுவேலின் அன்பு மருமகளும் சறோஜா ஜெயானந்தன் (லண்டன்), ஆனந்த குமார் (லண்டன்), செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயானந்தனின் (லண்டன்) அன்பு மாமியாரும். யூட்விதுஷன் (லண்டன்), டேமியன், பிதர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புஸ்பம், புனிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றீற்றம்மா. காலஞ்சென்ற அலோசியஸ், காலஞ்சென்ற ஜோன், இராயப்பு, சேவியர், விஜயன். லூர்த்தம்மா (அன்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவரின் பூதவுடல் இன்று செவ்வாய் (28-4-98) பிற்பகல் 4.00 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச் சாலையில் இருந்து நல்லடக்கத்திற்காக கல்கிசைப் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாமுவேல் ஆசீர்வாதம் (Tom)
(கணவர்)
இல: 39, 33 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.
(சி/3575)

## திருமதி நடனசபாபதிப்பிள்ளை பாக்கியம்

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற டிக்கோயா பிரபல வர்த்தகர் பொன்னையா நடனசபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவி திருமதி நடனசபாபதிப்பிள்ளை பாக்கியம் அவர்கள் 25-04-98 காலை இறைபதமடைந்தார்.

அன்னார் நவலட்சுமி, சர்வேஸ்வரி, அருளாம்பிகை, இராஜேஸ்வரி (லண்டன்), யோகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா (ஸ்ரீகண்ணன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), தேவராசா (லண்டன்), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), மகாலிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்) ஞானேஸ்வரன், துரைராஜா (லண்டன்), சிவானந்தராஜா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர், லண்டன்) திலகவதி, நவமலர் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, சங்கரப்பிள்ளை (லிப்டன்), ஆறுமுகம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), இந்திராணி, கந்தசாமி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-4-98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஸ்ரீஸ்கந்தராசா
(மகன்)
ஸ்ரீகண்ணன் ஸ்ரோர்ஸ்,
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(55310)

## வல்லிபுரம் சிவபாதம்

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவபாதம் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும் சோதிலிங்கம், மகாதேவி (ஆசிரியை, கனகரெத்தினம் ம. ம. வித்தியாலயம்), சரஸ்வதி, கமலாதேவி (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன், இரத்தினபூபதி, தம்பிநாயகம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சேனாதிராசா, சபாரெத்தினம், இராசரெத்தினம், திரவியம், நவரத்தினம் (ஓவசியர், நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாரதி (ஆண்டு – 10 மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), கோகுலன் (ஆண்டு - 5 மாணவன் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 - 4 – 98 முற்பகல் 11.00 மணியளவில் அவரது கோண்டாவில் மேற்கு இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
மடத்தடி லேன்,
கோண்டாவில் மேற்கு.
(55295)

## நேற்றும் சுற்றிவளைப்பு

கைதடி, நுணாவில், மட்டுவில் பகுதிகள் நேற்றும் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின் போது சிலர் கைதுசெய்யப் பட்டதாகத் தெரியவருகிறது. கடந்த 24 ஆம் திகதியும் இப்பகுதி சுற்றிவளைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## செல்வா நினைவுப் பேருரை

தந்தை செல்வா நூற்றாண்டு விழாக் குழுவின் மானிப்பாய்த் தொகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுப் பேருரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று நண்பகல் 12 மணிக்கு பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவுக் கொடி வழங்கல் நிகழ்வு உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் இன்று மருதனார்மடத்தில் ஆரம்பமாகும். கொடி வழங்கல் நிகழ்வு தொடர்ந்து ஒரு வாரத்துக்கு நடைபெறும்.

(ஐ–86)

## பயிற்சிப் பட்டறை

புதிதாக தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோருக்கும், ஏற்கனவே உள்ள தொழில்களை விரிவு படுத்துவதற்கு விம்ருபுவோருக்குமான பயிற்சிப் பட்டறைகளை நடத்த ஜேர்மன் தொழில் நுட்பநிறுவனம் (ஜி. ரி. சற்) முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசப் புனரமைப்பு நடவடிக்கையின் கீழ் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கும் நோக்குடன் மேற்படி நிறுவனம் பட்டறைகளை நடத்தும்.

இப்பயிற்சிப் பட்டறைகள் இன்று 28 ஆம், 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள பஸ்ரியன் சைனிஸ் உணவகத்தில் நடைபெறவுள்ளன.


**விக்னா**
கல்வி நிறுவனம்
மாதாந்தப்
பயிற்சிப் பரீட்சை - 3
ஆண்டு6-11 வகுப்புகளுக்கான நடைபெற்ற பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.
(55306)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
மோகன், பூர்ணிமா
ஜெயராம் நடித்த
பயணங்கள்
முடிவதில்லை
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223
(55008)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்
அகல வெண்திரையில்
28-04-98 செவ்வாய்
பிரபு, மோகன்லால்,
தபு நடித்த
சிறைச்சாலை
(CD வெளியீடு)
10–30 — 2–30
[illegible]
(55309)


# மரண அறிவித்தல்கள்

புலோலி
## வைத்திலிங்கம் நடராஜா

(பழைய சங்கக்கடை முன்னாள் முகாமையாளரும் கே. கே. எஸ் சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் ஊழியரும்)

சண்டிலிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட புலோலி வைத்திலிங்கம் நடராஜா 25 - 04 - 1998 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், புவிராஜ் (பாபு) அவர்களின் அருமைத் தந்தையும் அருந்ததி அவர்களின் மாமனாரும், சுகன்யா, திருவேணி, யாழினி, கவிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகரத்தினம், காலஞ்சென்ற ஜீவரத்தினம், இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சற்குணநாதன் (அம்பாறை), வேலுப்பிள்ளை (பிரான்ஸ்), விஜயகுமார் (U. K), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), சந்திரன் (U K), றஞ்சினி (கனடா), சகுந்தலா (கனடா), விஜயாயினி (கொழும்பு) ஆகியோரின் தாய்மாமனாரும், வக்சலா (U. K), ஜீவராஜ் (கனடா), தேவிகா (U. K), சாமிலா (கனடா), தர்சினி (கொழும்பு) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (28 - 04 - 98) இன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் விளாவெளி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வை. ந. புவிராஜ் (பாபு)
(மகன்)
தொட்டிலடி,
சண்டிலிப்பாய் தெற்கு.
(சி/3569)

## திருமதி றெஜினா நாகம்மா ஞானப்பிரகாசம்

அல்வாய் தெற்கைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற ஆசிரியையுமான திருமதி றெஜினா நாகம்மா ஞானப் பிரகாசம் அவர்கள் 20-04-1998 அன்று காலமானார்.

இவர் ஓய்வுபெற்ற அதிபர் க. த. ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், திருமதி இ. ஜெயராணி (பிரான்ஸ்), அன்ரன் ஜேசுதாசன் (சைப்பிரஸ்), திருமதி செ. புஸ்பராணி, திருமதி சி. செல்வராணி, யோஸ் மரியதாசன் (ஜேர்மனி), அருள் சூசைதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜசூரியர், தவமணி, செபஸ்தியாம்பிள்ளை, சிவலிங்கம், டொறத்தி, றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி ராகினி மோகன், திருமதி ரோகினி ரவிராஜ், ரஞ்சித், திருமதி ஜீன் விமலநாதன், றெஜி, பிறின்ஸ், டெனிஸ், றோய், திருமதி சுபாங்கி பற்றிக், சுமங்கலி, ஜெனிபர், றொகான், யஸ்மின், பிரியா, மரியா, மைக், வின்சன்ற், பற்றிக், கீதா, விஜயா, சத்யா, சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எறின், (F) விறெனி, றேச்சல், அருண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி 29-04-1998 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்/புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து மாலை 4.00 மணி வரை அல்வாய் தெற்கிலுள்ள அவரது இல்லமாகிய இராணி மனையில் நல்லுடல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கரவெட்டி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. த. ஞானப்பிரகாசம்
(கணவர்)
இராணி மனை,
அல்வாய்.
(55308)

## அம்பலவாணர் கந்தசாமி

புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் கந்தசாமி அவர்கள் 27-04-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும். காலஞ் சென்ற சபாநாதன் (கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு) காலஞ்சென்றஅம்பலவாணர் (கணித ஆசிரியர் PEC), திருமதி இந்திராணி, திருமதி திலகவதி (விஞ்ஞான ஆசிரியர் யா/புற்றளை மகாவித்தியாலயம்). திருமதி பத்மாவதி (விலங்கியல் ஆசிரியர், Ispathana College), கமலாவதி (விலங்கியல் ஆசிரியர் St. xavier's College, Nuwaraeiya, கனடா), யோகநாதன் (ஜேர்மனி). சிவநாதன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், வத்சலா பாலசுப்பிரமணியம் (பால விநாயகர் றேடர்ஸ், உடையார்கட்டு), சுவேந்திரராஜா (ஜேர்மனி), T. கணேசமூர்ந்தி (IPT, Maradana) சம்பந்தன (Phamarcist கனடா), நிறஞ்சலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பிருந்தா (பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி), வசந்தன் (2ஆம் வருட விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்). வேதா (திறந்த பல்கலைக்கழகம், நாவல), சிவதர்சன் (Lankem Ltd. கொழும்பு) நவநீதன் (உவர்மலை மகாவித்தியாலயம்), காண்டீபன் (உவர்மலைமகாவித்தியாலயம்) அருண் (ஹாட்லிக்கல்லூரி), விமல் (ஹாட்லிக்கல்லூரி)' ஜனனி, இராஜரூபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 27-4-98 அன்று ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தசாமி சிவநாதன்
புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
'அயோத்தி'
புலோலி தெற்கு,
புலோலி.
(55305)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் ஒளி நூலகம்

# வாகரை மக்களுக்கு உலர் உணவு மறுப்பது மனிதாபிமானமற்ற செயல்

## ஜனாதிபதிக்கு ஜோசப் எம்.பி. கடிதம்

மட்டக்களப்பு, ஏப். 28

''மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற வாகரைப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக உலர் உணவு வழங்குவதற்கு அப்பகுதி பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளது தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்களை திட்டமிட்டு இன ரீதியாக பட்டினிச் சாவுக்கு அழைத்துச் செல்லும் மனிதாபிமானமற்ற ஓர் அநாகரிகச் செயலாகும்''.

மட்டக்களப்பு மாவட்ட எம். பியும், தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக் குழுத் தலைவருமான ஜோசப்பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளார்.

இச் செயல் 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு எதிராக முன்னைய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட உணவுத் தடையைப் போன்ற ஒரு செயலாகும் என்றும் —

எனவே இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு வாகரைப் பகுதிக்கான உலர் உணவு விநியோகத்தை மீண்டும் வழமை நிலைக்கு கொண்டுவர மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுமதி வழங்கும்படி பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பிக்கும் படியும் —

ஜோசப்பரராஜசிங்கம் அவசரப் பக்ஸ் மூலம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### பின்தங்கிய பகுதி

அவர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசம் ஆகும். இப்பிரதேசத்தில் சுமார் 17 ஆயிரத்து 500 மக்கள் வாழ்கின்றார்கள். இத் தொகையில் ஏறத்தாழ 95 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வறுமை நிவாரணம் பெறுவோராவர்.

இப்பிரதேச மக்களது பொருளாதாரமான விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்றவை தற்போது முற்றாக செயலிழந்த நிலையிலேயேயுள்ளது;

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் என்ற காரணத்தால் இப்பிரதேசத்தில் எந்தவித அபிவிருத்தியையும் மேற்கொள்ள அரசு முன்வருவதில்லை. அதேவேளை இப்பகுதி மக்களுக்கு ஏதாவது அபிவிருத்தி அல்லது நிவாரணம் மேற்கொள்ள முன்வரும் அரச சார்பற்ற பொதுஸ்தாபனங்களுக்கும் பல கட்டுப்பாடுகளை பாதுகாப்புப் படையினர் விதித்துள்ளனர்.

### பொருள்எடுத்து வர கட்டுப்பாடு

இதனால் இப்பகுதி மக்கள் அரசால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

வாகரைப் பகுதியில் வாழும் மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஒட்டமாவடி வாழைச்சேனைப் பகுதிகளுக்கே வரவேண்டும்.

மிகுந்த போக்குவரத்துக் கஷ்டங்களுக்கு மத்தியில் வந்து பொருள்களைக் கொள்வனவு செய்து திரும்பும் பொழுது ஹைசேயன் ஏற்றம் இராணுவச் சாவடியில் வைத்து பலத்த சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட டன்பு குறித்த அளவு பொருள்களை மட்டுமே எடுத்துச் செல்ல மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

### சர்வதேச யுத்த நடைமுறைக்கு முரண்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்ற காரணத்துக்காக அப்பகுதி மக்கள் எடுத்துச் செல்லும் உணவுப்பொருள்களோ அல்லது விநியோகிக்கப்படும் உலர் உணவோ விடுதலைப் புலிகளைச்சென்றடைந்து விடும் என்ற காரணத்தைக்காட்டி உலர் உணவுத் தடையை மேற்கொள்வதோ அல்லது உணவு பொருள்களை மக்கள் கொண்டு செல்வதைத் கட்டுப் படுத்துவதோ சர்வதேச யுத்த முறைகள் சம்பந்தமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பனிதாபிமான விதிமுறைகளுக்கு முரணான ஒரு செயலாகும.

விடுதலைப் புலிகளும் இந்த நாட்டுப் பிரஜைகள் தான் என்கின்ற உண்மையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இச் சமயத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வடக்கு - கிழக்கு அதிபர் சம்பள நிலுவை விரைவில்

கொழும்பு, ஏப். 28

வடக்கு — கிழக்கில் உள்ள அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வு நிலுவையை வழங்குவதற்கு வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதிபர்களுக்கு 1995 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சம்பள உயர்வின் நிலுவைப் பணம் ஒருவருட காலத்துக்கு வடக்கு — கிழக்கு மாகாண அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை.

இச்சம்பள நிலுவை குறித்து இலங்கைத் தமிழக ஆசிரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளருடன் பேச்சுநடத்தியது.

இதையடுத்து இந்த நிலுவையை வழங்க ஆளுநரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. (இ-3)

# சீநோரை புனரமைக்க ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஏப். 28

குருநகர் சீநோர் தொழிற்சாலையை புனரமைக்க 80 இலட்சம் ரூபாவை வடமாகாண மீன் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை வழங்கியுள்ளது.

சீநோர் தொழிற்சாலையை மீள இயங்கச் செய்ய வேண்டிய அவசியம் குறித்து ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபை இந்த நிதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த தொழிற்சாலையை மீள இயக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# திருமலையில் காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது

திருகோணமலை, ஏப். 28

திருகோணமலையில் பரவ ஆரம்பித்துள்ள வைரஸ் காய்ச்சலினால் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்டத்துடன் சேர்ந்ததாக பரவும் இந்தக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டஏராளமானவர்கள் திருமலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு வழங்க வேண்டிய மருந்து வகைகளுக்கு தட்டுபபாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கொழும்பில் இருந்து அவசரமாக மருந்தை எடுத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# தோட்டப்பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்

கொழும்பு, ஏப். 28

தோட்டப்பாடசாலைகளில் பணியாற்ற இந்தியாவிலிருந்து 500 ஆசிரியர்கள் அடுத்த மாதம் வருகைதரவிருக்கின்றார்கள்.

அமைச்சர் எஸ். தொண்டமான் எடுத்த நடவடிக்கையின் பிரகாரம் மேற்படி ஆசிரியர் நியமனம் வழங்கப்படுகின்றது.

இந்த ஆசிரியர்களுக்கு இந்திய அரசு சம்பளம் வழங்கும் என்றும்—

இலங்கை அரசு வதிவிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனம் தொடர்பாக அடுத்த அமைச்சரவைக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் ரிச்சாட்பத்திரன பிரேரணை சமர்ப்பிக்கவுள்ளார் என இ. தொ. கா. வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

# பட்டதாரி ஆசிரியரைத் தெரிவு செய்ய யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 28

பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 488 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் மாகாணக் கல்வியமைச்சால் நேற்று முன்தினம் யாழ். கல்வித் திணைக்களத்துககு அனுப்பப்பட்டுள்ளது.

1413 பட்டதாரிகள் பொது பாடங்களுக்கும், 59 பட்டதாரிகள் இசைப்பாடதிற்கும், 16 பட்டதாரிகள் நடன பாடத்துக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ]இ-3-9]

# சுயதொழில் கடன்

கொழும்புத்துறை, ஏப். 28

ஊர்காவற்றுறை பிரதேசச் செயலாளர் பிரிவில் உழைப்பாளிகளற்ற ஏழைப் பெண்களுக்கு அண்மையில் சுயதொழில் கடன் வழங்கப்பட்டது.

அகதிகள் புனர் வாழ்வு நிறுவன உபதலைவர் எஸ். அப்புக்குட்டி நல்லதம்பி தலைமையில், திட்ட உத்தியோகத்தர் வி. தர்மலிங்கத்தின் கண்காணிப்பில் இப்பணம் வழங்கப்பட்டது. (30)

# விளையாட்டு நிகழ்வு

கொழும்புத்துறை. ஏப். 28

வேலணை சேர். வைத்திலிங்கம்துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி வித்தியாலய அதிபர். கு. கணேசலிங்கம் தலைமையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறும். (இ-30)

# முத்திரைகள்

சுண்டுக்குளி, வேலணை, வசாவிளான், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மானிப்பாய் தபாலகங்களுக்கு இன்று முத்திரைகள் வந்துசேரவிருக்கிறன.

அத்துடன் சென். ஜோன்ஸ் கல்லூரி 175 ஆவது ஆண்டு விழாவையொட்டி வெளியிடப்படவிருக்கும் முத்திரைக்கான முதல் நாள் தபாலுறைகளும் இன்று கொழும்பிலிருந்து எடுத்து வரப்படுகின்றன. (இ-3)

# சைக்கிள் கள்வனை துரத்திப் பிடித்தனர்

சைக்கிள் ஒன்றை திருடிச் சென்ற கள்வனை பொது மக்கள் துரத்திப்பிடித்து சுன்னாகம் பொலீஸில் ஒப்படைத்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மருதனார்மடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பெண் ஒருவர் மருதனார்மடம் — மானிப்பாய் வீதியில் அபிவிருத்திச்சபை உபநிலையம் முன்பாக தமது சைக்கிளை பூட்டாமல் நிறுத்திவிட்டு சற்று தூரத்தில் நின்று உரையாடிக் கொண்டிருந்தார்.

தமது சைக்கிளை எவரோ எடுத்துச் செல்வதை அவதானித்த அவர் ''ஐயோ கள்வன்'' என சத்தமிட்டார்.

கடைக்காரர்கள் சிலர் இதனைக் கவனித்து கள்வனை துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர்.

பின்னர் அவருக்குக் கொடுக்க வேண்டிய ''மரியாதையை'' தாராளமாக வழங்கிவிட்டு பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் சுன்னாகம் பொலீஸில் கள்வனை ஒப்படைத்தனர். (இ-151)

# பின் தங்கிய பகுதிகளை முன்னேற்ற வேண்டும்

## பிரதேச செயலர் கூறுகிறார்

வலி. வடக்கு ஏப். 28

வடக்கு தேய்கிறது, தெற்கு வளர்கிறது என்று கூறிக் கொண்டிராது பின் தங்கிய நிலையில் இருக்கும் எமது இடங்களை அபிவிருத்தி செய்ய சகலரும் முன்வர வேண்டும்.

மேற் கண்டவாறு தெல்லிப்பளை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் தெரிவித்தார்.

தெல்லிப்பளை பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களிடையேயான விளையாட்டுப் போட்டி மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் தலைமையில் நடைபெற்றது.

தனது தலைமை உரையில் திருமதி ப. திலகநாயகம் போல் மேலும் தெரிவித்ததாவது:

இவ்விளையாட்டுப் போட்டி இவ்வளவு சிறப்பாக நடந்து முடிந்ததையிட்டு கழகங்களையும் மைதானத்தை வழங்கியவர்களையும் ஊர்ப்பொதுமக்களையும் பாராட்டுகின்றேன்.

இம் மைதானத்தை பயன்படுத்த முனைந்தபோது பல சிரமங்களையும் தடைகளையும் அனுபவிக்க வேண்டியேற்பட்டது.

ஆனாலும் எமது வளர்ச்சிக்கு பின்தங்கிய பகுதிகளையும் எமது பகுதியையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இப் பகுதியில் உள்ள 45 கிராம அலுவலர் பிரிவுகளில் 15 இலேயே மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் யாழ். மாவட்டம் முழுவதும் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டு இப்பகுதியில் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

இப்படி அவர் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் மைதானம் சீரற்றதாக இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் மைதானத்தை பார்க்கும் போது நன்றாகவே இருக்கின்றது. வீரவீராங்கனைகளும் சிறந்த முறையில் விளையாடியுள்ளார்கள்.

இம் மைதானம் மேலும் சிறப்படைய வேண்டும் என்கிறார். (இ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில உலக செஞ்சிலுவைத்
தினத்தினைக் கொண்டாடுமுகமாக
கல்லூரி மாணவர்களுக்கான

## செஞ்சிலுவைப் பொது அறிவுப் போட்டி

கல்விப் பணிப்பாளர்கள் அனுசரணையுடன், மேற்படி போட்டி, செஞ்சிலுவை நிறுவனங்கள், முதலுதவி, ஆரம்ப சுகாதாரம் ஆகியவை தொடர்பாக கீழ் வரும் கல்லூரிகளில் **03 - 05 - 98** முற்பகல் 11. 00 மதியம் 12. 00 வரை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| மத்திய கல்லூரி | (யாழ்ப்பாணம்) |
| அத்தியார் இந்துக்கல்லூரி | (நீர்வேலி) |
| வட்டு. இந்துக்கல்லூரி | (வட்டுக்கோட்டை) |
| மகாஜனக் கல்லூரி | (மருதனார் மடம்) |
| இந்துக் கல்லூரி | (சாவகச்சேரி) |
| வட இந்து மகளிர் கல்லூரி | (பருத்தித்துறை) |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி | (மானிப்பாய்) |

கூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களுக்குப் பல பரிசுகள் 08 - 05 - 98 யாழ். ஸ்ரேடியத்தில் நடைபெற உள்ள செஞ்சிலுவைத்தின விழாவில் அளிக்கப்படும்.

பங்குபற்றவுள்ள கல்லூரி அதிபர்கள், தங்கள் கல்லூரியில் கல்வி கற்கும் பத்து மாணவர்களை அவர்களுக்கு சமீபமாக உள்ள பரீட்சை நடக்கும் கல்லூரிக்கு 03 - 05 - 98 முற்பகல் 11. 00 மணிக்கு அனுப்பி வைக்கவும். பங்குபற்றவுள்ள கல்லூரியின் பெயர், மாணவர் பெயர்கள் ஆகியவற்றை தயவு செய்து 01 - 05 - 98 - க்கு முன்னதாக எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3572)

## நெஞ்சகலா 2-ம் ஆண்டு அஞ்சலிகள்



மண்மகிழ:
**27 — 11 — 1941**

கண்நெகிழ:
**19 — 04 — 1996**

### திருமதி தவமணி நடராசா

திதி: **28 — 04 — 1998**

மாடிருக்க கன்றிருக்க வைத்த பொருள் தாமிருக்க வீடிருக்க ஊனிருக்க பெற்றபிள்ளை தானிருக்க கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே.


சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி/ 3574)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
22 — 07 — 1953

மறைவு:
08 — 05 — 1997

### திருமதி யசோதை கிருஷ்ணதாசன்

திதி: 28-04-1998

நல்ல மனைவி நல்லினிய தாய்
பல்லோர் போற்றும் பார்புகழ் மங்கை
சொல்ல வொணாத் துயர் தாங்கி
எல்லை கடந்து இறையுள் நின்று
அல்லல் தரும் ஆண்டு ஒன்றில்
வல்ல பெருமானை வணங்குகின்றோம்.

கணவன், மகள்,
உற்றார், உறவினர்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(55300)

## கண்பரிசோதனை

சண்டிலிப்பாய், ஏப். 28

மானிப்பாய் கோவில் பற்று லயன்ஸ் கழகம் நவாலி தெற்கு முரசொலி சனசமூசக நிலையத்துடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய இலவசகண்பரிசோதனையின் போது 110 பேருக்கு கண்பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில்தெரிவு செய்யப்பட்ட கண்பார்வை குறைந்தவர்களுக்கு மூக்கு கண்ணாடி வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன். செ.ஞானராஜா தெரிவித்தார். (இ-135)

## ஜி. சீ. ஈ. மாணவருக்கு விரிவுரை

யாழ்ப்பாணம், ஏப். 28

ஜி. சீ. ஈ உயர்தர வகுப்பு வர்த்தக மாணவர்களுக்காக யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இலவச விரிவுரைத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் 4 ஆவது விரிவுரையில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் இ. இரட்ணம் ''நிதிச்சந்தைகள்'' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார்.

(இ-4)

## கொப்பிகள் அன்பளிப்பு

திருநெல்வேலி, ஏப். 28

கொழும்பிலுள்ளஸ்ரீ இராம கிருஷ்ணமிஷன் உபதலைவர் சுவாமி ஆத்மகணானந்தா மகராஜினால் பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்துக்கு வழங்கப்பட்ட இரண்டாயிரத்து ஐந்நூறு அப்பியாசக் கொப்பிகள் ஆண்டு ஐந்து வகுப்பில் கற்கும்மாணவர்களுக்கு விரைவில் வழங்கப்படும்.

மே மாத முற்பகுதியில் யாழ். மாவட்டத்திலுள்ள 13 பாடசாலைகளின் மாணவர்களுக்கு இந்த அப்பியாசக் கொப்பிகள் பகிர்ந்தளிக்கப் படவுள்ளதாக சேவாச் சிரம சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

(இ-135)

நல்லூர் அருள்மிகு

## மஹாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டுள்ளது

நாளை **29—04—98** அன்று நடைபெறவிருந்த கும்பாபிஷேகம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் **07—06—98** நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

நிர்வாகி
157, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(55303)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்வி நிறுவன இயக்குநர்
திரு. மாதவநேசனின்
அன்புத்தந்தையார்

### கணேசு கோபாலசாமி

அவர்கள் 28 - 03 - 98 இல் பிரான்சில் காலமானார். அவரது 31 ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

லக்கி கல்வி நிறுவனம்
அளவெட்டி.

(சி/3573)

## தேவை

கீழ்க் காணும் ஸ்தாபனத்துக்கு இரண்டு பில் கிளார்க்குகளும், இரண்டு சமையற்காரர்களும் தேவை.

**பில் கிளார்க்:-**
வியாபாரத்தில் நன்கு அனுபவம் உள்ளவராகவும், ஸ்தாபனத்தில் தங்குவதற்கு சம்மதம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். முன்பு ஸ்தாபனங்களில் வேலை செய்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும் (சான்றிதழ் இருப்பின் நன்று)

**சமையல்:-**
நன்கு அனுபவம் உள்ளவராகவும், நற்பழக்கமுடையவராக இருப்பவர் விரும்பத் தக்கது.

**சந்திக்க வேண்டிய காலமும், நேரமும்:-**
**29 - 04 - 1998** தொடக்கம் **01 - 05 - 1998** வரை
காலை **10. 00** மணி தொடக்கம் நண்பகல் **12. 00** மணி

### அம்பிகை களஞ்சியம்

304 (110), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(55297)


உ

## விவாஹ சோபன விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் சித்திரை மாதம் 16 ஆம் நாள் புதன்கிழமை (29 - 04 - 1998) திருதியை திதியும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9-41 மணி முதல் முற்பகல் 11 - 03 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

சுழிபுரம், பறாளாய்
முருகமூர்த்தி கோயில்
பிரம்மஸ்ரீ
மு. பாலகுருசாமி சர்மா
தம்பதிகளின் கனிஷ்ட
புதல்வன் சிரஞ்சீவி
**பிரபாகர சர்மா**
(ஜேர்மனி)
அவர்களுக்கு



திருகோணமலை
முத்துக்குமாரசாமி கோயிலடி
பிரம்மஸ்ரீ
சி. சிவகாங்கேயசர்மா
தம்பதிகளின் கனிஷ்ட
புதல்வி சௌபாக்யவதி
**பத்மினி**
அவர்களை

பறாளாய் முருகன் திருவருள் துணைநிற்க கன்னிகாதான பாணிக்கிரண திருமாங்கல்யதாரண வைபவம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்: ஹோட்டல் மயூரா இன்டநாஷனல்
168, 169, ஆர்காட் றோட், வடபழனி, சென்னை- 26 (வடபழனி பஸ்தரிப்புக்கு எதிரே)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| பிம்மஸ்ரீ மு. பாலகுருசாமி சர்மா | பிரம்மஸ்ரீ சி. சிவகாங்கேய சர்மா |
| ஸ்ரீமதி விசாலாட்சி | ஸ்ரீமதி கல்யாணி |
| குடியிருப்பு, சுழிபுரம். | 25/2, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை |

தந்தி மே/பா சி. பாலகுமார், 28, துரைராஜ் தெரு, தி. நகர். சென்னை - 87

வரவேற்பாளர்கள்

திரு. திருமதி பா. கோபால கிருஷ்ண சர்மா (ஜேர்மனி)
திரு. திருமதி பா. முருகதாச சர்மா (நோர்வே)
திரு. திருமதி S. வரதராஜ சர்மா (கோண்டாவில்)
திரு. திருமதி S. [illegible]ராஜ சர்மா (சுழிபுரம்)
திரு. பா. ஜெகன்நாத சர்மா (சுழிபுரம்)
திரு. திருமதி திருலோஜனன் (கொழும்பு)
திரு. திருமதி புஸ்பராஜ சர்மா (ஜேர்மனி)

(55296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவற்கட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு சுமுக தீர்வு

சுதுமலை, ஏப். 28

சாவற்கட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது.

மீன் பிடிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்து ஒரு வார காலமாக காக்கைதீவு, அராலிப்பகுதிகளுக்கு மீன் பிடிக்க இவர்கள் செல்லவில்லை.

மீனவர்கள் வழமையாக அதிகாலை 4.00 மணிக்கு மீன் பிடிக்கச் செல்வது வழக்கம். எனினும் கடந்த 20ஆம் திகதி முதல் காலை 6.00 மணிக்கே மீன் பிடிக்கச் செல்லுமாறு இவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனை ஆட்சேபித்து சாவற்கட்டு மீனவர்கள் ஒரு வார காலமாக மீன் பிடிச்கச் செல்லவில்லை,

இதன் பின் காக்கைதீவு இராணுவ முகாம் அதிகாரி சகல மீனவர்களையும் அழைத்து கூட்டம் நடத்தினார்.

சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு மீண்டும் காலை 4.00 மணிக்குப்பின் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இந்த அனுமதியை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணிக்கு சாவற்கட்டு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

மீனவர்கள் ஆனைக்கோட்டை சந்தி ஊடாக, மாட்டொழுங்கை வீதியால் வந்து காக்கைதீவு சந்தியை அடைந்த பின் இராணுவத்தினரின் சோதனையின் பின் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

மீனவர்கள் ஒருவர் இருவராக வராமல் சேர்ந்து கூட்டமாக வருதல் நல்லது என இராணுவத்தினரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். (இ-139)

# செல்வா நினைவு நாள்: ரெலோ அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28

''வடக்கு — கிழக்கு முழுமையாக இணைந்த தாயகம் ஒன்றை தமிழ்த் தேசிய இனம் பெற்று தன்னாட்சி காண்பதே தந்தை செல்வாவுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி ஆகும்''

இப்படி தமிழ் ஈழவிடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

தந்தை செல்வாவின் 21 ஆவது ஆண்டு நினைவையொட்டி அந்த அமைப்பின் முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்சண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தந்தை செல்வா தமிழ் தேசிய இனத்தின் தாயகக் கோட்பாட்டிலே மிகவும் உறுதியாக இருந்து பல ஒப்பந்தங்களைச் செய்தார். அவற்றின் மூலம் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் தமிழ் மொழி மாநிலம் என்பதனைச் சிங்களத் தலைமைகளை ஒப்புக்கொள்ள வைத்தார்.

இன்றைக்கு பல தமிழ்கட்சிகள் வடக்கு — கிழக்கு இணைப்பை தாரைவார்க்கத் துணிந்துவிட்டன. இச்சதித் திட்டத்தின் ஓர் அங்கமாக அரசின் தீர்வுத்திட்டத்தையும் ஆதரித்து நிற்கின்றன — இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வன்னியில் மழை

வவுனியா, ஏப். 28

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வன்னியில் நேற்று முன்தினம் கடும் மழைபெய்தது. (இ-3)

## பாலர் பாடசாலை

கொழும்புத்துறை, ஏப். 28

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும், அரியாலை ஸ்ரீ கலைமகள் பாலர் பாடசாலை இடம்பெயர்வின் பின் புனரமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளது. (இ-30)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் நடத்தும் ''ஈழத்தில் தமிழ்த்திறனாய்வியலின் வரலாறும் வளர்ச்சியும்'' என்ற தலைப்பிலான ஆய்வரங்கு நாளை புதன் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியம் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

தமிழியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் இந்த ஆய்வரங்கு பயனுடையதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சை

யாழ். சைவ பரிபாலன சபையினரால் வருடம் தோறும் நடத்தப்பட்டுவரும் சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சைகள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை வண்ணை, நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சைக்கு 45 பேரும், சித்தாந்த பால பண்டிதர் பரீட்சைக்கு 4 பேரும் சித்தாந்த பண்டிதர் பரீட்சைக்கு 14 பேரும் தோற்றுகின்றனர். இம்முறை கடந்த ஆண்டுகளைவிட அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான நேரசூசி, அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைச் [illegible] கந்தசாமி அறிவித்துள்ளார். (இ-7)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி செகராசா மேனகா**

பிறப்பு: 1981 — 09 — 04  இறப்பு: 1996 — 04 — 19

திதி: 1998 - 04 - 28

உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வோடு எம்முடன் வாழும் இதயத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு
ஆண்டுகள் சென்றிடினும் உங்கள்
நினைவுகள் எம்மனதை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா, தம்பி, தங்கா, ரகு, அம்மம்மா, அப்பப்பா, அத்தைமார், மாமாமார், சித்தி, சித்தப்பாமார், மணியக்கா குடும்பம்.

க. செகராசா (C. T. B),
வயாவிளான் மேற்கு,
வயாவிளான். (55177)



## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: 18 — 04 — 1948



உதிர்வு: 29 — 03 — 1998

**திருமதி ஜேக்கப் றெஜீனா ஜெயசீலி**

நித்திய அமைதியில் சேர்ந்திடுவீர்
நீடித்த ஒளியில் வாழ்ந்திடுவீர்
ஆண்டவர் எம்மையும் அழைக்கும் நாள்
அவரோடு உம்மையும் சந்திப்போம்.

உங்கள் ஆன்மா அமைதிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(29—04—98 அன்று காலை 6.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்படும்)

சகோதரன் ஜோ. வி. ஜெயராஜா.

33/14, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். (55284)



உ

## திறப்பு விழா அழைப்பு

ஸ்தாபனம்: **ERAJEE GOLD CENTRE**

# இராஜி கோல்ட் சென்ரர்

காலம்:- 29 - 04 - 98 புதன்கிழமை

பகல் 9 - 41 — 11 - 03 இற்கும்
இடைப்பட்ட சுபவேளை.

திறப்பு விழா:-

**உயர்திரு- S. சொக்கலிங்கம் அவர்கள்**

(வட பிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளரும், சமாதான நீதிவானும்)

**உயர்திரு. தம்பிஐயா- கனகரத்தினம் அவர்கள்**

(ஸ்தாபகர், மணி ஜுவல்லர்ஸ்–சாவகச்சேரி–தந்தையும் தாயுமான எமது தகப்பனார்)

ஆகியோரால் மங்கல விளக்கேற்றித் திறந்து வைக்கப்படும் மேற்படி விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர், நண்பர்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

கனக. குமாரசாமி (குடும்பம்)

''சோதிட நிலையம்''
நீகரை வைரவ கோயிலடி, சங்கானை.

கடை:-
40, மெயின் வீதி,
சங்கானை. (55292)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சீனியர் பாக்கியம்**

(சந்தம்புளியடி - காரைநகர்)

மறைவு: 1998 03—29

தாயாய் மாமியாய் பேர்த்தியாய் பூட்டியாய்
தாலாட்டி சீராட்டி பாராட்டி வளர்த்தீர்களே!
தீயாய் வேகுதே எங்கள் நெஞ்சமெல்லாம்
திடீரென நீங்கள் மறைந்திட்ட மாயமென்ன?

வீரிட்டு நொந்து புலம்பிட வைத்து
விட்டுப் பிரிந்து எங்கு சென்றீர்கள்?
ஆரிடம் முறையிட்டு ஆற்றுவோம் எம்துயரை
அம்மாவே! அம்மம்மாவே! எங்கு காண்போமினி?

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டி கேணி ஐயப்பனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்: பா. நிர்பானந்தன் (பேரன்) (அப்பன்)

120/4, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (55199)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீடுத் தளபாடங்கள், மின் விசிறிகள், எவசில்வர் பொருள்கள் இன்னும் உங்கள் தேவைக்குரிய பல பொருள்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 71/9, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை. [55099]

ஒன்றரை மாதம் நிரம்பிய பூச்சி நீக்கிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. மகேந்திரன், 183, சென். ஜேம்ஸ் லேன், யாழ்ப்பாணம் (தேவாலயம் அருகில்) [55288]

## யாழ்ப்பாணம்

25-4-98 அன்று வானொலியில் என்ஜினியர் நாடகம் கேட்டீர்களா? அதைஎழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் எங்கும் கிடைக்கும். ரூபா50. [55267]

## தவறிவிட்டது

அரசடி றோட் கஸ்தூரியார் வீதிச்சந்திக்கும். வின்சர் தியேட்டர் சந்திக்கும் இடையில் 27-4-98 காலை 8.45 மணியளவில் $1\frac{1}{4}$ பவுண் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருமதி சிறீஸ்கந்தராஜா, யாழ். போதனா வைத்தியசாலை. மருத்துவத்துறையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [55290]

போதகர் ஜேசன் செல்வராசா என்பவருக்குரிய 122-2259 இலக்கமுடைய மோட்டார் வாகன வரி, காப்புறுதிப்பத்திரம் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தேவசபை, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம், (55294)

## தெளிவாகப் பார்க்க

ரி.வி. நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும், பூஸ்ரர்களை பழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபால சிங்கம் B. Sc. Ceylon Dip. in Electronic Engineering London.- 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3295]

# கந்தபுராணப்படிப்பு

சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலைபண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு அருள்மிகுஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயச்சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமான கந்தபுராணப்படிப்பு ஆறு மாதங்கள் நடைபெறும் எனப்பேரவையின் பொருளாளர் செ. மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (ஐ-30)

# காமினிஜெயசூரிய காலமானார்

முன்னாள் அமைச்சரும், பௌத்த காங்கிரஸ் தலைவருமான காமினிஜெயசூரிய கடந்த சனியன்று காலமானார். அவருக்கு 74 வயது.

தீவிர பௌத்த சமய வாதியான இவர் சிங்கள மக்களுக்காக குரல் எழுப்பி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

உ

# தசாக கிருகயக்கு அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருஷம் சித்திரை மாதம் 6 ஆம் திகதி (19-04-98) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார்

**நடராசக் குருக்கள் - சவுந்தரம்மா**

அவர்களின்

தயாகம்:- சித்திரை மீ 15 ஆம் திகதி (28-04-98) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவிலும்,

கிருகயக்ளும்:- சித்திரை மீ 18 ஆம் திகதி (01-05-98) வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவிலும் நடைபெறும்.

மேற்படி கிரியைகளில் தாங்கள் குடும்ப சகிதம் பங்கு பற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

தகவல்:

**ந. சுப்பிரமணியக் குருக்கள்**
வேலைக்கைப்பிள்ளையார் கோயில்,
மானிப்பாய்.

23, விதானையார் வீதி,
கொழும்புத்துறை. (55285)

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு: 11 — 07 — 1930

உதிர்வு: 09 — 05 — 1997

**அமரர் கந்தையா முருகேசு**

(உடையார் முருகேசு)

திதி:- 28 - 04 - 1998


உடலால் எமைவிட்டுப் பிரிந்தாலும் உணர்வோடு எம்முடன் வாழும் எம் இதய தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக,

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

N. ஆனந்தராசா (ஆசிரியர்),
வரணி. (55127)

# இரண்டாம் ஆண்டு நினைவு



**Dr. ஆ. இராஜநாயகம்**

தோற்றம்: 1933 — 10 — 03

மறைவு: 1996 — 04 — 19

திதி: 1998 — 04 — 28

ஈராண்டு ஏகின இதய வேதனை ஏகவில்லை
குமுறிபொங்கும் எரிமலையும் ஒருநாள் அமைதிகாணும்
குளம் நிறைந்தால் ஜலம் வழிந்துவேறுவழி ஏகும்
மனதில் பொங்கும் துயரவெள்ளம் வழியும் நாள் ஏது
முடிவுதான் ஏது,

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நெஞ்சம் இருக்கும் வரை நினைவு அகலாது
வெந்தணலில் துடிக்கும்!
குடும்பத்தினர்

பனாவெட்டி,
தொல்புரம். (55224)

# இலங்கை வலைப்பந்தாட்ட அணியில் யாழ். வீராங்கனைகள் மூவர்

இலங்கை வலைப்பந்தாட்ட குழுவில் யாழ். வீராங்கனைகள் மூவரை சேர்த்துக் கொள்வதற்கு வலைப்பந்தாட்ட சம்மேளனம் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

இத்தகவலை சம்மேளனத் தலைவி தமாரா தர்மகீர்த்தி தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

சமீபத்தில் கொழும்புக்கு வருகை தந்த யாழ். வீராங்கனைகளின் திறமை எம்மை கவர்ந்து விட்டது.

இந்த நிலையில் குறைந்தது மூவரையாவது எமது குழுவில் சேர்க்க தீர்மானித்துள்ளோம்.

ஒஸிபா ஜெராலின் வின்ஸ்லோ, (கோல் தடுப்பாளர்), சந்திரமதி தவராசா (கோல் போடுபவர்) சத்தியமதி இராசதுரை (பக்கநிலை எதிர்த்தாடுபவர்) அல்லது பவானி சதானந்தா (பக்கநிலை எதிர்த்தாடுபவர்) ஆகியோரிலேயே மூவரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். எமது இந்த நடவடிக்கைக்கு யாழ். மக்கள் பூரண ஒத்துழைப்பு தருவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

இப்படி அவர் கூறினார். (இ-21)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 21 — 01 — 1936

இறப்பு: 05 — 05 — 1992

அமரர்

**சோமசுந்தரம் நவரத்தினம்**

(செல்வம் மெக்கானிக், இணுவில் மேற்கு)

திதி: 28-4-1998

பண்போடும் பாசத்தோடும் வளர்த்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு,
இணுவில். (55242)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 1970 — 03 — 05

மண்ணின் அணைப்பில்: 1996 — 04 — 19

**இராசதுரை சிவகுமார்**

(சிவம்)

திதி: 1998 - 04 - 28

சிவகுமாரா! எங்கள் சிந்தை கலங்கவைத்த — நீ எங்கையடா சென்றாய்? உன் சிரித்த இதழும் செந்தளித்த முகமும் எப்போதடா காண்போம் இனி? நீ இளஞ்சூரியன் எங்கே இடையில் மறைந்து போனாய்? நீகனிதரும் காய் மரம் எங்கையடாகாணாமல் போனாய். நேற்றுவரை நீ விளையாடிய முற்றம் நீ இன்றி வாடிக்கிடக்குதடா. உன் சைக்கிள் ஓடித் திரிந்த தெரு இன்றுன்னை தேடித் தவிக்குதடா! மணக் கோலத்தைக் காண ஆவலுற்றிருந்த நாம் உன் மரணக் கோலத்தையே கண்டோம்! நேற்று மறைந்த சூரியனும் மீண்டும் வருகிறான். நீ மட்டும் ஏனடா இன்னும் வரவில்லை? நீ மறைந்து ஆண்டுகள் இரண்டு சென்றனவோ — ஆயினும் மறையவில்லை உன்மீது கொண்ட பாசமல்லோ!

உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்!
குடும்பத்தினர்

ஏழாலை மத்தி,
ஏழாலை. (55239)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கல்கத்தின் கணிப்பு

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தம் செய்யவும், பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் இதுவே சரியான சந்தர்ப்பம்—

இவ்வாறு கருத்துத் தெரிவிக்கின்றார் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் பிரதம தளபதியாகப் பணிபுரிந்த ஜெனரல் ஏ. எஸ். கல்கத்.

ஜெனரல் கல்கத் இப்போது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் சர்வதேச சபையின் நடப்பாண்டுத் தலைவராகப் பணிபுரிகின்றார்.

அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் போரில் இரண்டு சாராருமே வெல்ல முடியாது. வவுனியா—கிளிநொச்சி பிரதான விநியோகப் பாதையை இலங்கைப் படைகள் இன்னும் பல மாதங்களில் கைப்பற்றினாலும் கூட, அதனைத் தக்க வைத்துக் கொள்வதும் பொதுமக்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்துப்பாதையை உண்டாக்குவதும் மிகவும் கடினமான, சிரமமான உயிரிழப்புக்களை உண்டாக்கும் செயலாகவே இருக்கும்—என்றும் ஜெனரல் கல்கத் கூறுகிறார்.

இலங்கையில் நிலை கொண்டிருந்த வேளை, வன்னிப் பிராந்தியத்தில் சுமார் 29 மாதங்கள் போர் செய்த நேரடி அனுபவம் உடையவர் ஜெனரல் கல்கத். ஆகையால் அவரது இப்போதைய வன்னிப் போர் குறித்த இராணுவ ஆய்வு உன்னிப்பாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியஒன்று; அசட்டை செய்ய முடியாதது.

கல்கத் மட்டுமென்ன, இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு இல்லை—காணமுடியாது—என்று விடயம் தெரிந்தவர்கள் எல்லோரும், யதார்த்தம் புரிந்தவர்கள் யாவரும் மனித அழிவை விரும்பாத சகலரும் கருத்துத் தெரிவித்துவருகிறார்கள்.

அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்குக் கூட இவற்றில் எதுவுமே புரிந்ததாக இல்லை என சொல்வதற்கு இல்லை. அரசியல் லாபத்தையும், தனிப்பட்ட புகழையும் விரும்பி தெரிந்தும் தெரியாதவர் போலச் செயற்படுகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா மட்டுமென்ன, போரினூடு சமாதானம் என்ற அர்த்தமற்ற கோட்பாட்டைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு போரைத் தொடர்கிறார்.

ஆனால் சர்வதேச மாநாடுகளிலும், வெளிநாட்டுத் தலைவர்களுடன் பேசும் போதும் சமாதான விரும்பியாகக் காட்டி, வேஷம் போடுகிறார்; அதற்கேற்றவாறு மினுக்கிய வார்த்தைகளைக் கொட்டவும் செய்கிறார்.

சமாதானத்திலும், அமைதியிலும், நீதியான தீர்விலும் நம்பிக்கை இருப்பின் கல்கத் போன்ற அனுபவமும் திறமையும் உடையவர்களின் கருத்துக்களைக் காதில் போட்டுக்கொண்டு போரை நிறுத்த வேண்டும்.

சமாதானப் பேச்சுக்களைத் தொடங்க வேண்டும். தாம் நினைப்பது நடக்கும் என்று எண்ணி ஆகாயக் கோட்டை கட்டி அதில் வாழ நினைக்கக் கூடாது.

# மீண்டும் புத்துயிர் பெற்று எழுகிறது

# நீர்வேலி கைத்தொழில் நிறுவனம்

இலங்கையின் வடபகுதிக்கு வரும் சுற்றுலாக்காரர்களையும், பிரமுகர்களையும் தன்னகத்தே அழைத்து விருந்களிக்கும் யாழ்ப்பாணத்தின் பிரபல்யம் வாய்ந்த கிராமங்களில் நீர்வேலியும் ஒன்றாகும்.

இயற்கையாக அமைந்த நில அமைப்பும், நீர்வளமும், விவசாய வளர்ச்சியும், கைத்தொழில் விருத்தியுமே இக்கிராமத்தின் சிறப்புக்குக் காரணங்களாகும். இக்கிராமத்தில் விவசாயமும் கைத்தொழிலும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கிராமத்தைப் பெருமைப்படுத்தின.

விவசாயமும், கைத்தொழிலும் நாட்டு வளர்ச்சிக்கு இன்றியமையாதன என்பதை இக்கிராம மக்களின் செயற்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

விவசாயம் நாட்டின் முதுகெலும்பு. அப்படியான விவசாயத்தைச் செய்ய விவசாய உபகரணங்கள் முக்கியமானவை உபகரணங்கள் இல்லாமல் விவசாயத்தைச் செய்ய முடியாது. எனவே

## விவசாயத்துடன் சமவளர்ச்சி கண்டு சாதனைகள் படைத்தது

இரு தொழில்களும் நாட்டு வளர்ச்சிக்கு அவசியம் தேவையானவை. அதனால் இருவகைத் தொழில்களும் இணைந்து செயற்படும் கிராமம் ஓர் உதாரண கிராமமாகும்.

விவசாய வளர்ச்சிக்கு நீர்வேலி முன்னுதாரணமானது. வாழைச் செய்கையால் பெயர்பெற்ற கிராமம் நீர்வேலி என்பது யாவருமறிந்ததே. இன்னும் மாணவர்களின் பாடநூல்களில் கூட நீர்வேலி வாழைப்பழம், நீர்வேலி வாழைத்தோட்டம் என்பன இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் வாழைக்குலை விற்பனைக்கென வலி. கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனவுச் சங்கம், நீர்வேலியில் அமைந்து செயற்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இச் சங்கத்தின் மூலம் இங்கு உற்பத்தியாகும் வாழைக்குலைகள் தோட்டம் தோட்டமாகச் சேகரிக்கப்பட்டு லொறிகள் மூலமும், ரயில் மூலமும் கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப் பட்டு விற்பனையாகின்றன. அது பழைய கதையாகி இச்சங்கம் இன்று செயலிழந்து நிற்பது வேதனைக்குரியதே.

மேலும் வடபகுதியில் வெங்காயச் செய்கையாளருக்கான வெங்காயச் சங்கமும் கூட்டுறவு முறையில் நீர்வேலியில் கரந்தன் என்னும் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டு செயலாற்றி வந்தமையைக் குறிப்பிடலாம்.

### கைத் தொழிலாலும் பெயர்

மேலும் கைத்தொழிலாளர்களும் இக்கிராமத்தின் பெயரைப் பலரும் அறிய வைத்தனர். இரும்புவேலை, மரவேலை என்றால் மக்கள் மனதில் இன்றும் அழியா இடம் பெற்றிருப்பது நீர்வேலிக் கிராமமே. விவசாயத் தேவைக்கு வேண்டிய கத்திகள், மண்வெட்டிகள், சத்தகங்கள் என்பனவென்றாலென்ன, மாட்டு வண்டிகளென்றாலென்ன, தரமானவையாகவும், அழகானவையாகவும் படைத்துக் கொடுப்பவர்கள் நீர்வேலிக் கைத் தொழிலாளர்கள்.

இதனால் இன்றும் நீர்வேலிக் கத்தி, நீர்வேலிப் பூட்டு. நீர்வேலி வண்டில் என்பன மக்கள் மனதில் மங்கா இடம் பெற்றுக் கொண்டவையாகும். இன்னும் நீர்வேலி தெளிகருவி (Sprayer) இறக்குமதி செய்யப்பட்ட கிருமிநாசனி தெளிகருவிகளிலும் பார்க்க தரமானவை எனப் பாராட்டுப் பெற்றவையாகும்.

இத்தனை சிறப்புகளும் நீர்வேலிக் கைத்தொழிலுக்கு ஏற்படுவதற்கு இங்கு கூட்டுறவு முறையில் அமைக்கப் பட்ட காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கத்தின் செயற்பாடுகளே காரணம் எனலாம். 1947ஆம் ஆண்டுஅக்காலகாரியாதிகாரி காலஞ் சென்ற தி. முருகேசம் பிள்ளை அவர்களின்அனுசரணையுடன்காலஞ்சென்ற இவ்வூர் சமூகசேவையாளரும் கூட்டுறவாளருமாகிய சின்னப்பு தர்மலிங்கம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப் பட்ட இந்த ஸ்தாபனம் அன்று முதல் குடாநாட்டுமக்களுக்கு மட்டுமன்றி அகில இலங்கை மக்களுக்கும் நல்ல சேவையாற்றி வந்துள்ளது.

### தங்கப்பதக்கம் பெற்ற உற்பத்திகள்

இங்கு இரும்பு வேலைப் பகுதி, மரவேலைப் பகுதி என இரு பகுதிகளாக தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு நடைபெற்று வந்துள்ளன. இந்த ஸ்தாபனத்தின் மூலம் அரசாங்க ஒப்பந்த வேலைகள், பள்ளிக்

## செய்தி மடல்

கூட தளபாட வேலைகள், அலுவலகத் தளபாடங்கள், மற்றும் விவசாய உபகரணங்கள் தரமானவையாகவும், உறுதியானவையாகவும் உற்பத்தி செய்யப்பட்டன. இன்னும் இந்த ஸ்தாபனத்தில் செய்யப்பட்ட வீட்டு அலுமாரிகள், கதவுப் பூட்டுகள் குசினிப்பாவனைக்குரிய அரிவாள், திருவுபலகை, இடியப்ப உரல் என்பன தரமானவையெனப் பெயர் பெற்றதோடு பலரதும் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டன.

1950 ஆம் ஆண்டு நடைபெற்ற கொழும்புத் திட்டப் பொருள் காட்சியில் இச்சங்கத்தில் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்கள் தரத்தில் உயர்ந்தவையாகக் கணிக்கப் பெற்று, தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுக் கொடுத்ததோடு பாராட்டுதல்களையும் நன்மதிப்பையும் தேடிக்கொடுத்தன.

இப்படியாக சேவையாற்றி வந்த ஸ்தாபனம் கைத் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி யாழ். மாவட்ட கமத் தொழிலாளர்களுக்கும் இன்றியமையாத ஒரு ஸ்தாபனமாகவே விளங்கியது. கமத் தொழிலாளர்கள் தமக்கு வேண்டிய விவசாய உபகரணங்களைச் செய்விக்கவும், திருத்துவிக்கவும், மறுசீரமைக்கவும் கை கொடுத்து உதவியது இக் கைத்தொழிற் சங்கம்.

### கிராமத்தின் ஊருணியாக...

இச் சங்கத்தின் தொழிற்சாலை சக்தி நடமாடும் ஒரு தொழிலாலயம் என்றும் கூறலாம். இங்கே மின்சாரத்தின் உதவியால் பெரிய இராட்சத மரங்களையெல்லாம் அரியும் இயந்திரத்தின் ஒலி ஒரு புறமும், அவற்றைச் சீவும் இயந்திரத்தின் ஒலி மறுபுறமும் இன்னும் இரும்பை அடித்து உருவாக்கும் தொழிலின் பேரொலி ஒரு புறமும் இரும்புக்கு தவ்வுப் போடும் இயந்திரங்களின் ஒலி இன்னொரு புறமும், இரும்பு கடையும் இயந்திரங்களின் இரைச்சல், வேறு சாணைபிடிக்கும் இயந்திரங்களின் இரைச்சல், அட்டதிக்குகளிலும் ஒலித்த இந்த தொழிற்சாலை இக்கிராமத்தின் ஊருணி போன்று விளங்கியது. நீர்வேலி தன்னகம் வருவோரை வரவேற்கும் ஒரு மத்திய நிலையமாக அமைந்தமை யாவரும் அறிந்ததே.

அண்மைக்கால அனர்த்தங்களின் போது 1987 மார்ச் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி பாரிய கட்டடச் சேதங்களையும், பொருள் சேதங்களையும் கண்டது. இந்தச் சேதங்களை மேற்படி சங்கமே சுமார் மூன்று லட்சம் ரூபா வரை செலவு செய்து சீர் செய்து கொண்டது.

த பரராஜசிங்கம்
(நீர்வேலி செய்தியாளர்)

சங்கம் மீண்டும் மக்கள் சேவை செய்து வரும் வேளையில், ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது மீண்டும் பாரிய கட்டடச் சேதங்களையும், பொருள்சேதங்களையும் கண்டது அதனால் மீண்டும் இயங்க முடியாத நிலையில் வலி. கிழக்கு உதவிஅரசாங்க அதிபர் கேதீஸ்வரனின் நன்முயற்சியால், அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய ஸ்தாபனத்தாரின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இற்றைவரை சுமார் 4,27,000 ரூபா செலவில் ஒரு பகுதி கட்டடத்தின் திருத்தங்களைச் செய்துள்ளது. மேலும், தொழில் செய்வதற்குரிய உபகரணங்களையும் மற்றும் தளபாடங்களையும் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது. மீதிக் கட்டடத் திருத்த வேலைகளும் செய்யப்பட வேண்டியுள்ளன.

அனைத்து வேலைகளும் நிறைவுபெற்று இவ்வாண்டு நடுப்பகுதியில் மக்கள் சேவையாற்றக் கூடியதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

உயிர் நீத்த பின்னர் சாம்பரிலிருந்து எழும் 'பீனிக்ஸ்' பறவை போல காமாட்சியம்பாள் ஐக்கிய கைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் புத்துயிர் பெற்றுவருகிறது.

★

# யாழ். மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட அணி

யாழ். மாவட்டத்துக்கான கரப்பந்தாட்ட (செற்அப்) அணி ஒன்றைத் தெரிவு செய்வதற்கு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தீர்மானித்துள்ளது.

செற் அப் முறையிலான கரப்பந்தாட்டம் விளையாடும் கழகங்கள் தமது கழகங்களில் இருந்து இரு வீரர்களைத் தெரிவு செய்து எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு பயிற்சிக்கான சகல ஆயத்தங்களுடன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## நாளை

சித்திரை - 16

புதன்கிழமை

திதி: திருதியை

முற்பகல் 11.37வரை.

நட்சத்திரம்: ரோகிணி

பிற்பகல்: 3.44 வரை

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 4.28 –5.58

ராகுகாலம்: 11.58-1.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இன்பம் அனுபவிக்க நீ விரும்பினால், பிறர் இன்பம் அடைய வழி செய். குறுக்கு வழியும் கோணல் நடத்தையும் கடைப்பிடிப்பதால் நீ நிச்சயமாக இன்பம் துய்க்க முடியாது.

இங்கர்சால்

# நல்லூர் பாடசாலை சுற்றுப் போட்டி முடிவு

நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மென்பந்து துடுப்பாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய சுற்றுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

★ மென்பந்து துடுப்பாட்டம்.

முதலாம் இடம்:- யாழ். இந்துக்கல்லூரி.

இரண்டாம் இடம்:- கொக்குவில் இந்துக்கல்லூரி.

மூன்றாவது இடம்:- கனகரத்தினம் ம.ம.வி.

★ கரபந்தாட்டப் போட்டி (19 வயது).

முதலாவது இடம்:- அரியாலை ஸ்ரீ பார்வதிவித்தியாலயம்.

இரண்டாவதுஇடம்:- கனகரத்தினம் ம.ம.வி.

★ கரபந்தாட்டப் போட்டி (17வயது)

முதலாவது இடம்:- அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.

இரண்டாவது இடம்:- கனகரத்தினம் ம.ம.வி.

★ வலைப்பந்தாட்டப் போட்டி (19 வயது)

முதலாவது இடம்:- இந்து மகளிர் கல்லூரி.

இரண்டாவது இடம்:- கனகரத்தினம் ம.ம.வி.

மூன்றாவது இடம்:- கொக்குவில் இந்துக்கல்லூரி.

★ வலைப்பந்தாட்டப் போட்டி (17 வயது)

முதலாம் இடம்:- கனகரத்தினம் ம.ம.வி.

இரண்டாம் இடம்:-இந்து மகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம்:- அரியாலை ஸ்ரீபார்வதிவித்தியாலயம்.

★ வலைப்பந்தாட்டப் போட்டி (15 வயது)

முதலாம் இடம் கனகரத்தினம் ம.ம.வி.

இரண்டாம் இடம்:- இந்து மகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம்; உயரப்புலம் மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜார்க்கண்ட் வழக்கு விசாரணையை நிறுத்துவதற்கு நீதிமன்றம் மறுப்பு

ஜார்க்கண்ட் லஞ்ச வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்று முன்னாள் எம். பிக்கள் 9 பேர் கோரியிருந்தனர். இதன் மீதான முடிவை சிறப்பு நீதிமன்றம் காலவரையின்றி ஒத்திவைத்தது.

இந்த வழக்குத் தொடர்பாக ஒரு மனு உச்ச நீதிமன்றத்தின் ஆய்வில் இருப்பதால் 9 முன்னாள் எம். பிக்களின் கோரிக்கை குறித்து இப்போது எந்தத் தீர்ப்பையும் அளிக்க முடியாது என்று நீதிபதி பாரிஹோக் கூறினார்.

வழக்கில் விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்ம ராவ் கேட்டுக் கொண்டிருந்தார். அதையும் நீதிபதி ஏற்கவில்லை.

1993 ஜூலை 28ஆம் திகதி நரசிம்ம ராவ் பிரதமராக இருந்த போது அவரது அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஜார்க்கண்ட்முக்திமோர்ச்சா எம். பிக்களுக்கு கோடிக் கணக்கில் லஞ்சம் கொடுத்து அவர்களது ஆதரவை நரசிம்ம ராவ் பெற்றார் என்பது குற்றச் சாட்டு,

இந்த விவகாரத்தில் ராவ் உட்பட 21பேர் மீது சி.பி.ஐ. வழக்குபோட்டது. நாடாளுமன்றத்தில் எம். பிக்களின் செயற்பாடு குறித்து எவரும் வழக்குப் போட முடியாது என்று கூறும் அரசமைப்புச் சட்டத்தின் 105(2) பிரிவை இவர்கள் சுட்டிக் காட்டினர்.

லஞ்சம் பெற்றவர்கள், லஞ்சம் வாங்கியவர்கள் என்று இருபிரிவுகளாக இவர்களை உச்ச நீதிமன்றம் பிரித்தது. லஞ்சம் வாங்கி வாக்கு செலுத்திய 9 பேருக்கும் 105(2) சட்டப் பிரிவின் கீழ் பாதுகாப்பு உண்டு என்று உச்ச நீதிமன்றம் கடந்த 17 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் கூறியிருந்தது.

ராவ், முன்னாள் மத்திய அமைச்சர் சதீஷ் சர்மா, முன்னாள் மத்திய அமைச்சர் பூட்டா சிங், ஹரியானா முன்னாள் முதல்வர் பஜன் லால், கர்நாடக முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி, கர்நாடக அமைச்சர்கள் ராமலிங்க ரெட்டி மற்றும் எச். எம். ரேவண்ணா மாநிலங்களவை உறுப்பினர் வி. ராஜேஸ்வர ராவ் ஆகியோரின் லஞ்ச சதி வேலை நாடாளுமன்றத்துக்கு வெளியே நடந்துள்ளதால் 105(2) சட்டப் பிரிவின் பாதுகாப்பு இவர்களுக்குக் கிடையாது என்றும் இவர்கள் மீது வழக்குத் தொடரும் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

(இ-10)

## பூட்டாசிங் எக்கட்சியிலும் சேரமாட்டாராம்!

புதுடில்லி ஏப். 28

இந்திய முன்னாள் மத்திய அமைச்சரான பூட்டாசிங் தாம் எந்த ஓர் அரசியற் கட்சியிலும் சேரப் போவதில்லை என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியாகாந்தி அழைப்பு விடுத்தால் காங்கிரஸ் கட்சியில் தாம் சேரக் கூடுமென வெளியான தகவல்களை பூட்டாசிங் மறுத்தார்.

## பதவி துறப்பு

ஒரிசா மாநில முதலமைச்சர் ஒரிசா பிரதேச காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஒரு நபருக்கு ஒரு பதவி என்ற கொள்கையைச் செயற்படுத்துமாறு கட்சிக்குள் வலுவான கோரிக்கை எழுந்ததை அடுத்தே இந்த நடவடிக்கையை அவர் மேற்கொண்டார்.

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தியிடம் பட்நாயக் தமது ராஜினாமாக் கடிதத்தை அளித்துள்ளார்.

(இ-ரி)

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 — 06 — 1945

உதிர்வு: 29 — 04 — 1987

### சந்திரசேகரம் கதிரவேலு

(ராசா)

(முன்னாள் ஸ்ரீலங்கா தேசிய உப்புக் கூட்டுத்தாபன இலிகிதர், ஆனையிறவு)

திதி: 28 - 04 - 1998

பதினோராண்டுகள் பறந்தோடின எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தோடு வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் அன்புமுகம் காணாது வாடித்துடிக்கின்றோம்.
சொல்லில் அடங்காத துயரம் அப்பா எங்களுக்கு நாங்கள் சோக வலைக்குள் சிக்கித் தவிக்கின்றோம்.
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்திபெற இறையடி பணிகின்றோம்.

உங்களின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(55370)


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் சித்திரை மாதம் 16 ஆம் திகதி (29/04/98) புதன்கிழமை மிதுனலக்கினமும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய முற்பகல் 9. 41 — 10. 48 சுபமுகூர்த்த வேளையில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**பரணிதரன்**
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறை செல்வி
**சகுந்தலா**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இன்பருட்டி சித்தி விநாயகர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் நடைபெற இருப்பதாலும் மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெற இருப்பதாலும் இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இரு வீட்டார் அழைப்பு

திரு. திருமதி குணசேகரம்
(இளைப்பாறிய துறைமுகக் கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளர்)
பாடசாலை வீதி, கற்கோவளம்,
பருத்தித்துறை.

திரு. திருமதி சுப்பிரமணியம்
(மெத்தக்கடை சந்தி சுப்பண்ணா)
கற்கோவளம்,
பருத்தித்துறை.

(சி/ 3577)



# சர்வதேச லயன்ஸ் கழகம்

**மாவட்டம் 306 பி**
**ஸ்ரீலங்கா**

வெகு விரைவில் பிராந்தியம் 8 இன் இளம் லியோக்களின் மாபெரும் எழுச்சி விழாவாகக் கொண்டாடப்படவுள்ள

## "லியோ கருத்தரங்கு"

நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால் நடத்தப்படும்

- பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி
- பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி வரிசையில்

பிராந்தியம் 8 இன் லியோக்களுக்கான

## "போட்டிப் பரீட்சை"

இப்பரீட்சை வினாக்கள் சர்வதேச லயன்ஸ் கழகம், லியோ கழகம் தொடர்பானதாகவும், அவற்றின் சேவை தொடர்பானதாகவும் அமையும்.

யாழ். நகரில் புகழ் பெற்ற குளிர் ஸ்தாபனமான

## 'கல்யாணி கிறீம் ஹவுஸ்.'

அனுசரணையுடன் நடத்தப்படும் இப்போட்டிப் பரீட்சையின் பரிசுகள்.

1 ஆம் பரிசு - ரூபா 1,500.00
2 ஆம் பரிசு - ரூபா 1,000.00
3 ஆம் பரிசு - ரூபா 750.00

சான்றிதழ்களுடன் கூடிய ஆறுதல் பரிசுகள் 10. பரீட்சை தொடர்பான சகல விவரங்களும் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகும்.

லயன். பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்.
மாவட்டம் 306 பி
ஸ்ரீலங்கா.

விளம்பர உதவி:-

இளம் உள்ளங்களின் இதயத்தை வென்ற யாழ்.நகர மக்களின் கோடை வெயில் அகோரத்தை தமது சுகாதாரமான, சுவையான குளிர்பான ஐஸ்கிறீம் வகைகளால் தணித்துவரும் குளிர்பான வகைகளின் தன்னிகரில்லா நிபுணர்கள்

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

இல. 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3578)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 11 — 04 — 1935

ஆண்டவன் அணைப்பில்: 12 — 05 — 1994

### அமரர் க. இரத்தினம்

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்ப ஒளிவிளக்காய் இருந்து உலகமிது என்றுணர்த்தி ஊரறிய வாழவைத்த எமது அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து வருடங்கள் நான்கானாலும் உங்கள் பாசம் என்றும் எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மைத்துனர், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

தகவல்: இரத்தினம் நித்தியகுமார்,
இராஜகாரியர் வீதி, மானிப்பாய்.

(50045)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உடைந்த தளபாடங்கள், மின் விசிறிகள், வேறு மின் உபகரணங்கள், தட்டச்சு இயந்திரங்கள், உருக்கு அலுமாரிகள் போன்ற பொருள்கள் 07-05-1998 அன்று முற்பகல் 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இவற்றை ஏலத்தில் வாங்குபவர்கள் உடனடியாகவே கேள்வித் தொகையைச் செலுத்தி பொருள்களை அப்புறப்படுத்தல் வேண்டும். இவற்றை கிழமை நாள்களில் இச்செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையின் பிரதம எழுதுநருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

16-04-1998. [சி/3583]

# 31 ஆம்நாள் நினைவுப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா
(கல்விப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

தவப்பேறு: 26 — 12 — 1942 சிவப்பேறு 30 — 03 — 1998

இறந்தும் இறவாது எம் இதயத்தில் வீற்றிருக்கும் இனிய பிறவியே! இனிக் காண்பது எங்கே?

அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 29-04-98 புதன்கிழமை காலை 10 மணி முதல் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெறவுள்ளது, அவ்வைபவத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# நன்றி நவில்கின்றோம்

எம் தலைமகன் நோயுற்ற வேளைமுதல் வேலணைச் சாட்டி மயானத்தில் அக்கினியோடு சங்கமிக்கும் வரை ஒவ்வொரு கணமும் உறுதுணை செய்த இனிய உள்ளங்களுக்கும், இன்றுவரை எமக்கு ஆறுதல் கூறி அனுதாபப் பிரசுரங்களையும், அனுதாபச் செய்திகளையும் வெளியிட்டு எம் துன்பத்தில்பங்கு கொள்ளும் தூய உள்ளங்கள் அனைத்துக்கும் எம் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்.

''மாணிக்கம்'',
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி/3579)

# மரண அறிவித்தல்

## திருமதி விசுவநாதர் தங்கரத்தினம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசுவநாதர் தங்கரத்தினம் 27 - 04 - 1998 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தில்லையம்பலம், இராசமுத்து ஆகியோரின் அன்பு மகளும், சின்னத்துரை விசுவநாதரின் அன்பு மனைவியும், தயானந்தன், சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி இரத்தினம், கந்தசாமி (கனடா), சிவசுப்பிரமணியம் (டென்மார்க்), திருமதி தவமணி (மலேசியா), நாகராசா (கனடா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நவரத்தினம், அன்னதேவி, சிவனேஸ்வரி, காலஞ்சென்ற வைரவநாதன், யசோதராதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (28 - 04 - 98) பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. விசுவநாதர்
(கணவர்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (55316)

# கிராமசேவகர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுகளுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய் பிற்பகல் 3-30மணிக்கு யாழ். நகர இராணுவத் தளபதிபிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் தலைமையில்யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டபுனரமைப்புக்கென இந்திய அரசினால் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்ட சிமெந்து தொடர்பான பட்டியல்களை தம்முடன் கொண்டு வருமாறு கிராம சேவையாளர்கள் கேட்கப் பட்டுள்ளனர். (ஐ-7)

# பட்டதாரிகள் விவரப் பட்டியல்

குருநகர், ஏப். 28

பட்டதாரி ஆசிரியர்களாகத் தெரிவுசெய்ய விண்ணப்பித்த ஆயிரத்து 413 பட்டதாரிகளின் பெயர் விவரப் பட்டியல் யாழ்.கல்வி வலயம் ஒன்றுக்குக் கிடைத்துள்ளது.

1979 தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரை பட்டம் பெற்றவர்களின் விவரம் இப்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

ஆனால் பட்டியல் எதற்காக அனுப்பப்பட்டது என்பது குறித்த விவரங்கள் கொழும்பு கல்வி அமைச்சில் இருந்து எதிர்பார்க்கப்படுவதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-51)

# வைரவ கவசம் நூல் வெளியீடு

வடமராட்சி, ஏப். 28

அருள்மிகு கணபால சுவாமிகள் எழுதிய ''வைரவ கவசம்'' எனப்படும் அருட் கனி நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி தோட்டத்து வைரவர் ஆலய முன்றலில் நடைபெறும்.

ஆசியுரையை சிவ ஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் நிகழ்த்துவார், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையினை இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. சே. ஏகாம்பரநாதன் வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக முதல் நிலை விரிவுரையாளர் எம். வேதநாதன், கரவெட்டி. பிரதிக்கல்விப்பணிப்பாளர் வே. செல்வராஜா, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், நாடகச் சக்கரவர்த்தி, பி. பரராசசிங்கம், வட கிழக்கு மாகாண சபை இணைப்பாளர் வே. வீரபத்திர பிள்ளை, இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் எஸ். முருகேசம் பிள்ளை ஆகியோர் சிறப்பரையாற்றுவார்கள். (ஐ-117)

# தேர்த் தரிப்பிட அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 28

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் புதிய தேர்த் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடுகின்ற வைபவம் சதுர்த்தி தினமான நாளை புதன் கிழமை காலை 7.00 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வழமைபோல் சதுர்த்தி உற்சவம் இடம் பெறும். [ஐ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னபூரணம் பாலசுந்தரம்

நாயன்மார்கட்டைச் சேர்ந்த அமரர் செ. பாலசுந்தரம் (அரசாங்க மின்சார இலாகா) அவர்களது அன்பு மனைவி அன்னபூரணம் 26 - 4 - 98 ஞாயிற்றுக்கிழமை இரவு 9. 30 மணியளவில் காலமாகிவிட்டார்.

இவர் நித்தியானந்தன் (இலங்கை மின் சார சபை), கருணானந்தன் (கனடா), புவனேஸ்வரி, பவானந்தம் (ரெலிகொம், யாழ்ப்பாணம்), கலாநிதி (ஆசிரியை, நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி (விரிவுரையாளர், ஸ்ரீலங்கா பொலீஸ் பயிற்சிக் கல்லூரி, களுத்துறை), ஜெயராஜபாலா (புறோமோட்டேர்ஸ், நல்லூர்), சிவயோகம், நாகபூசணி, புஷ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது நாயன்மார்கட்டு இல்லத்தில் இன்று (28 - 4 - 98) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, செம்மணி இந்து மயானத்தில் பி. ப. 3.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. பவானந்தம்
(மகன்)

மருத்துவமனை முன்பாக,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (55312)

## திருமதி பாக்கியம் துரைராஜா

பொன்னார் வளவு தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 39, Fernando Road, வெள்ளவத்தை, கொழும்பில் வசித்தவருமான திருமதி பாக்கியம் துரைராஜா 23. 4. 98 அன்று காலமானார். இவர் துரைராஜாவின் அன்பு மனைவியும் அசோகன், பாலகுமார், அருந்ததி, நளினி, இந்துமதி, அகிலன் ஆகியோரின் அன்னையும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. V. சிவமூர்த்தி

132, பிறவுண்றோட், யாழ்ப்பாணம். (55302)

## குலோத்துங்கமுதலியார் ஜெயராஜா

[டாக்டர், குளியாப்பிட்டி]

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் ஜெயராஜா அவர்கள் 26 - 04 - 98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலோத்துங்க முதலியார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த அன்பு மகனும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரை தம்பதிகளின் மருமகனும், சரோஜினியின் அன்புக் கணவரும், திருமதி ரவீந்திரன் கீதாஜினி (ஜேர்மனி), சபேசன் (U. K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரனின் (ஜேர்மனி) பாசமிகு மாமனாரும், ஜெயராணி, தவராணி, குலராஜா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ஸ்கந்தராஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் பொறியியல் திணைக்களம், குளியாப்பிட்டி), பரமராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரத்தினம் (R. D. O., பிரதேச செயலகம், நல்லூர்), தர்மினி, கமலாதேவி, சிவானந்ததேவி, விவேகானந்தன் (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), ரதிதேவி கந்தசாமி, காலஞ்சென்ற ஸ்ரீதரன் (பிரான்ஸ்) ஆகியோரது மைத்துனரும், அபிராமியின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. பரமராஜா [பரம்]
(சகோதரன்)

T/3, அண்டேர்சன் தொடர்மாடி,
நாரஹென்பிட்டியா,
கொழும்பு - 5,
T. P. 591307.

உபதபால் கந்தோர் அருகில்
சுதுமலை மத்தி,
மானிப்பாய். (55283)

## கந்தர் சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

கந்தர் மடம் நீராவியடியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தர் சிவசுப்பிரமணியம் 24-04-98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், அரியரட்ணம் (கொழும்பு), ஜெயரட்ணம் (ஜேர்மனி), குமாரரத்தினம் (பபா), பூபாலரத்தினம் (குஞ்சன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினமலர் (கொழும்பு), பாஷினி (ஜேர்மனி), சிவகலை, ஞானமணிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா, நவரோஷன, ஜெனித்திரா, ஜெயதிலீபன், உமாசுதன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (28-04-98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ராசன், பபா, குஞ்சன்

S. அரியரட்ணம்,
391/5, அழுத்மாவத்தை வீதி,
கொழும்பு — 15.
T. P. 522353.

நாகம்மா விற்பனை நிலையம்,
7/1, 1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (55314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும்…

(முதலாம் பக்கத் தொடர்)
திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்கப் பரிசோதனைகள் மூலம் அவரில் 'எய்ட்ஸ்' நோய்க்கான அறிகுறிகள் இருப்பது கண்டறியப்பட்டது தெரிந்ததே.

அதனையடுத்து அந்த நபரின் மனைவி, பிள்ளைகள் மீதும் பூர்வாங்கப் பரிசோதனை நடத்த யாழ். ஆஸ்பத்திரியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி அவரின் மனைவி மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் அவரிடமும் எய்ட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் இருப்பதைக் காட்டி உள்ளன.

கணவன், மனைவி இருவரிலும் 'எய்ட்ஸ்' நோய் அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது குடாநாட்டில் இதுவே முதல் முறையாகும்.

இவர்களது ஆறு பிள்ளைகள் மீதும் பூர்வாங்க எய்ட்ஸ் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அவர்களில் எவரிலும் 'எய்ட்ஸ்' தொற்றியதற்கான ஆரம்ப அறிகுறிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனினும் பிள்ளைகள் அனைவரும் தொடர்ந்தும் காலத்துக்குக் காலம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டியது அவசியம் என்று ஆஸ்பத்திரி ஆய்வு கூட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

'எய்ட்ஸ்' நோய் அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்ட மேற்படி கணவன், மனைவி இருவரையும் மேலதிக பரிசோதனைக்குட்படுத்துவதற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. [ஐ-139[


எமது ஒறிஜினல் வெளியீடு

காதலா காதலா
மாவீரன்
ஒரு தாயின் சபதம்
மாடிவீட்டு ஏழை
நீர்க்குமிழி
ஆட்டோ ராணி

வீடியோ CD வெளியீடு
உயர்ந்த உள்ளம்

ஜீன்ஸ், போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.

வீடியோ விமல்,
யாழ்ப்பாணம்.

(சி/3584)


## புலி…

(முதலாம் பக்கத் தொடர்)
விக்கப்பட்டது.

கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் சம்பூர், சேனையூர், கூனித்தீவு, நாவலடி, இத்திக்குளம் ஆகிய பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

மகிந்தபுரத்திலிருந்து புறப்பட்ட மற்றுமோர் அணியினர் ஈச்சலம்பத்தை, வெருகல், மல்லிகைத்தீவு ஆகிய இடங்களில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கை காரணமாக கிராமவாசிகள் கிராமங்களையோ அல்லது வீடுகளையோ விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

இப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் உட்பட எந்தவொரு அரச நிறுவனங்களும் இயங்கவில்லை. மூதூர் —வெருகல் இ. போ. ச. பஸ் சேவை மகிந்தபுரத்துக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் தெற்கே ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின்போது கடற்படையினர் கடல்வழியாகவும், இராணுவத்தினர் தரை வழியாகவும் இராணுவ கட்டுப்பாடற்ற மேற்படி பிரதேசங்களுக்குள் நுழைந்தனர்.

விமானப்படையின் உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

''எதிர்ப்புகள் இன்றி பாதுகாப்பு தரப்பு முன்னேறியுள்ளது. பாதுகாப்புத் தரப்புக்கு சேதங்கள் இல்லை.'' —என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் வதிவிடங்கள், அலுவலகங்கள் என்பன சேதமாக்கப்பட்டதாகவும் அவை தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கை புலிகளை விரட்டும் நடவடிக்கை என்றும்—

இந்த நடவடிக்கை முடிந்த பின்பு இராணுவம் மீள பழையஇடத்துக்குத் திரும்பிவிடும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-21)

## ஆயிரம்…

(முதலாம் பக்கத் தொடர்)
ரயில் நிலையத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாளை காங்கேசன்துறையில் தங்க வைக்கப்பட்டு மறுநாள் காலை 6 மணிக்கு கப்பலில் திருமலை அனுப்பப்படுவர்.

பயணிகளுக்கான நாளைய இரவு உணவை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் வழங்க முன்வந்துள்ளது. (ஐ-3-7)

## ஜாவின்…

(முதலாம் பக்கத் தொடர்)
அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இலங்கையின் ஆட்சேபனை அவரிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமானதும் உடனடியானதுமான தீர்வு அவசியம் என்றும்—

அதன் பொருட்டே புதிய இந்திய அரசு இலங்கையின் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுள்ளது எனவும்— நாகேந்திர நாத்ஜா அண்மையில் கொழும்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதர் மங்கள முனசிங்கா இந்திய வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

இதேவேளை—

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ-இ-10-21)

## யாழ்…

(முதலாம் பக்கத் தொடர்)
நேற்று முதல் நிறுத்தப்பட்டது. சகல வார்ட்டுகளிலும் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது, ஆனால் ஊசி மருந்து ஏற்றப்பயன்படுத்தும் 'சிறிஞ்'சுக்கு ஆஸ்பத்திரியில் பலத்த தட்டுப்பாடு நீண்டகாலமாக நிலவி வருகிறது.

''எய்ட்ஸ் தொற்றுவதில் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஊசிபோட வரும்போதும், இரத்தம் பரிசோதிக்க வரும்போதும் புதிய 'சிறிஞ்'களை வாங்கி வாருங்கள்'' என்ற எச்சரிக்கை வாசகம் எழுதப்பட்ட அட்டைகள் மருத்துவ கிளினிக் பிரிவில் நேற்று காணப்பட்டன.

சாதாரண நோயுடன் அனுமதிக்கப்படும் ஒருவர் பின்னர் ''எயிட்ஸ்'' நோயாளி எனச் சந்தேகிக்கப்படும்போது அவர் சிகிச்சைபெற்ற வார்ட்டில் அவருடன் சேர்ந்து சிகிச்சை பெற்ற ஏனைய நோயாளியளுக்கும் 'எய்ட்ஸ்' தொற்ற வாய்ப்புண்டு, நோயாளிகளுக்கு ஊசி ஏற்றப் பயன்படுத்தும் 'சிறிஞ்' மூலம் ''எய்ட்ஸ்'' இலகுவில் தொற்றக் கூடியது. (ஐ-139)

# வலையில் சிக்கி மீனவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

கடற்றொழிலுக்குச்சென்ற ஒருவர் மீனுக்கு விரித்த வலையில் சிக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கல்முனைக்கும், முகத்துவாரத்துக்கும் இடைப்பட்ட கடற் பிராந்தியத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த மொறிஸ் அருள்ராஜ் (வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

அதிகாலை 4 மணிக்குக் கடற்றொழிலுக்குச் சக தொழிலாளிகளுடன் சென்ற இவர் சம்பவம் நடைபெற்ற கடற்பிராந்தியத்தில் பட்டி வலை விரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்றும் —

அவ்வேளை கடலில் மூழ்கி வலையில் ஏற்பட்ட சிக்குகளை எடுக்க முயன்றபோது வலையில் சிக்குண்டு நீரின் மேலே வரமுடியாது தத்தளித்து உயிரிழந்தார் என்றும் —

விரித்த வலையைக் கரைப் பகுதியில் நின்று சகதொழிலாளிகள் கரையை நோக்கி இழுத்தவேளை வலை மடிக்குள் சிக்குண்டு இறந்த நிலையில் அவர் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையைத் தொடர்ந்து, நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ-139-15)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராக இருந்து அமரத்துவமடைந்த சு. இரத்தினராசாவின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறும். அஞ்சலிக் கூட்டத்தில் கல்வியாளர்கள் பலர் அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். [ஐ-5]

## ஆயுதக்…

(முதலாம் பக்கத் தொடர்)
நிகழ்வில் மகிழ்வுடன் பங்குபற்றி நீங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள்.

நாங்களும் யுத்தத்தையோ அழிவையோ விரும்பவில்லை. அதனால்தான் ஆயுதமின்றி சிவில் உடையில் இன்று உங்கள் முன் நான் வந்து நிற்கிறேன்.

இன்று இந்த நிகழ்ச்சிக்கு வரமுடியாமல் இருக்கும் ஆள்களுக்கும்- ஆயுத கலாசாரத்தைக் கைவிட்டு, சமாதானத்தை விரும்பும்-உங்கள் செய்தியை தெரியப்படுத்துங்கள்.

நாங்களும், நீங்களும்விரும்புவது அமைதியான சமாதானத்தையே-

எனவே ஆயுத கலாசாரத்தைக் கைவிட்டு-பிரதான அரசியல் நீரோட்டத்துக்கு வருமாறு அவர்களுக்கு நானும் அழைப்பு விடுக்கின்றேன்.

இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

இந்நிகழ்ச்சியை ஒட்டி நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. (உ-9)

## வெளிநாட்டு…

(முதலாம் பக்கத் தொடர்)
தையும் கொண்டு புலிகள் எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் —

தமிழர்களின் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு சகலவழிகளிலும் உதவி புரிந்து போராட்டத்துக்கு உந்து சக்தியாக நிற்கவேண்டிய பாரிய பொறுப்பு வெளிநாடுகளில் உள்ள தமிழர்களைச் சார்ந்துள்ளது என்றும் பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னிச் சமர்க்களம் இருதரப்பினரதும் பலப் பரீட்சைக் களமாக மாறிவருகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-9)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



அருண்
புளொக் தயாரிப்பாளர்
அத்துடன்
குறைந்த கட்டணத்தில் தரமான முறையில்
போட்டோ பிரதிகள்
அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வரவு
[552 91]

விற்பனையாகிறது
முகாமைக் கணக்கீடு
ஆசிரியர்
எஸ். சுமந்திரன்
B. Com (Hons) S. L. AcctS (MPDRR)
ஏகவினியோகஸ்தர்கள்;.
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீடு: சோதி பப்ளிகேஷன்ஸ்
(55315)

நாளை புதுக்கடை திறப்பு விழா

வெகுதானிய வருடம் சித்திரை மாதம் 16ஆம் நாள் [29-04-98]
நாளை புதன்கிழமை காலை 7-10 முதல் 7–57 [பழைய நேரம்]
வரையுள்ள சுபவேளையில்

SELF START WINE SHOP
செல்வ் ஸ்ராட்
மதுபான விற்பனை நிலையம்
(உத்தரவு பெற்ற வியாபாரம்)

எனும் நிறுவனத்தை 245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஆரம்பித்து வைக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் இச்சுபவேளையில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

V. S. B. Group.

275, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
J. S. B. COMMUNICATION,
272, Stanley Road, Jaffna.
(சி/3570)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 28-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org